**மதுரை சம்பளக் கணக்கு அலுவலரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திரு. சு.ரா. முரளிதரன், பி.காம்., எப்.சி.ஏ.,**

நக.எண்.725398/2024/நிரு.1/அ 2, நாள்.24.07.2025.

**பொருள் :** பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நியமனம் (நேர்முகத் தேர்வு அல்லாத பணிகள்) தொகுதி IIA வாயிலாக கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மதுரை மாவட்டக் கருவூல அலகு கணக்கர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

**பார்வை :**

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3 கடித எண்.1605/PSD-A2/2024, நாள் 04.07.2024.
2. ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை அவர்களின் செ.மு.ஆ.ந.க.எண். 3050/ 2024/ C3, நாள்.22.07.2024.
3. இவ்வலுவலக செ.மு.ஆ.ந.க.எண்.725398/2024/நிரு.1/அ 2, நாள் 30.07.2024, 31.07.2024, 02.08.2024 (ம) 05.08.2024.
4. கருவூல அலுவலர், மதுரை ந.க.எண்.727867/2024/அ1, நாள் 14.07.2025.

----

**ஆணை :**

பார்வை 1-இல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நியமனம் தொகுதி – II (நேர்முகத் தேர்வு அல்லாத பணிகள்) தொகுதி IIA வாயிலாக கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, மதுரை ஓரலகில் பணியேற்பு செய்து மதுரை மாவட்டக் கருவூல அலகில் கணக்கர்களாகப் பணியாற்றி வரும் கீழ்க்காணும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணி நிபந்தனைச் சட்டம், 2016, பிரிவு 28(1)-இன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய நியமனம் தொகுதி – II (நேர்முகத் தேர்வு அல்லாத பணிகள்) தொகுதி IIA தெரிவு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகிய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுக்குட்பட்டது என்ற நிபந்தனையின்பேரில் கீழ்க்காணும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாளன்று கணக்கர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| தேர்வாணைய வ.எண். | பெயர் (ம) பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 7 | திருமதி மு. காயத்திரி, கணக்கர் | 30.07.2024 பிப. | 30.07.2024 பிப. | சார்நிலைக் கருவூலம், மதுரை தெற்கு. |
| 17 | திரு மு. சரத்குமார், கணக்கர். | 05,08.2024 பிப. | 05,08.2024 பிப. | சார்நிலைக் கருவூலம், மதுரை தெற்கு. |
| 23 | திருமதி சு. சினேகா, கணக்கர் | 02.08.2024 முப. | 02.08.2024 முப. | சார்நிலைக் கருவூலம், மதுரை வடக்கு. |
| 51 | திருமதி நா. ஹேமலதா, கணக்கர் | 31.07.2024 முப. | 31.07.2024 முப. | சார்நிலைக் கருவூலம், மதுரை வடக்கு. |
| 173 | திருமதி அ. நம்பிநாச்சியார், கணக்கர் | 31.07.2024 முப. | 31.07.2024 முப. | சார்நிலைக் கருவூலம், மதுரை வடக்கு. |
| 176 | திரு ச. ஜெயந்த், கணக்கர் | 31.07.2024 முப. | 31.07.2024 முப. | மாவட்டக் கருவூலம், மதுரை |
| 393 | திருமதி க. லெட்சுமிபிரியா, கணக்கர் | 02.08.2024 முப. | 02.08.2024 முப. | சார்நிலைக் கருவூலம், மதுரை தெற்கு. |
| 379 | திருமதி மா. ஷீபாராணி, கணக்கர் | 31.07.2024 முப. | 31.07.2024 முப. | மாவட்டக் கருவூலம், மதுரை |

தனியர்கள் பணியானது மூன்று வருட தொடர் பணிக்காலத்தில் இரண்டு வருடங்களுக்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது.

25/7/25

சம்பளக் கணக்கு அலுவலர்,
மதுரை.

25/7/25

பெறுநர்

தொடர்புடைய பணியாளர்கள். கருவூல அலுவலர் மூலமாக.

நகல்

கருவூல அலுவலர்,
மதுரை.

நகல் : நிரு.1/அ2 முதன்மை ஆணைத் தொகுப்பு.